www.Padasalai.Net

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

**அரசு கடிதம்(e file) எண்.4362/ப.க.5(1)/2024-1, நாள்: 16.05.2024**

அனுப்புநர்
திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசுசெயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்விஇயக்குனர்,
சென்னை – 06.

தொடக்கக் கல்விஇயக்குனர்,
சென்னை – 06.

அய்யா,

**பொருள்:** மாணவர் நலத்திட்டங்கள் வழங்குதல் தொடர்பாக பெற்றோருக்கு விவரங்களை தெரிவித்தல் – சார்பு

**************

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதை உறுதி செய்யும் வகையிலும், மாணவர்கள் இடைநிற்றலின்றி கல்வி பயில்வதை கருத்தில் கொண்டும், பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

2. 14 வகையான மாணவர் நல திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நலத்திட்டங்கள் அனைத்தையும் பள்ளியில் பயிலும் குழந்தைகளின் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும். இதனை பெற்றோர்களுக்கு தெரிவிப்பதற்கு ஏதுவாக பெற்றோர்களின் கைப்பேசி எண்களுக்கு கல்வி மேலாண்மைத் தகவல் முகமை மூலமாக தகவல் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பினை செவ்வனே மேற்கொள்ள வேண்டுமாயின் பெற்றோர்களின் சரியான கைப்பேசி எண்களை பெற்று கல்வி மேலாண்மைத் தகவல் முகமை தளத்தில் உள்ளீடு செய்தல் வேண்டும்.

3. இந்நிகழ்வில் ஏற்கனவே கல்வி மேலாண்மைத் தகவல் முகமையில் உள்ளீடு செய்து வைத்துள்ள பெற்றோர்களின் கைப்பேசி எண்களை மீண்டும் சரிபார்த்தல் வேண்டும். மாணவர்கள் சேர்க்கையின் போது வழங்கிய கைபேசி எண்கள் தற்போது உரிய எண்கள் பயன்பாட்டில் இல்லாது இருப்பின் பெற்றோர்களுக்கு தகவல் சென்றடைவது சாத்தியமன்று. எனவே, **பெற்றோர்களின்**

www.Padasalai.Net

கைப்பேசி எண்களை சரிபார்க்கும் பணியானது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை ஏறக்குறைய 35 லட்சம் மாணவர்களின் பெற்றோர்களுடைய கைபேசி எண்கள் சரிபாக்கப்பட்டுள்ளது.

4. கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் திறக்கப்பட்டவுடன் மாணவர்களுக்கான பாட புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் சீருடைகள் உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்பட உள்ளதால் இப்பணி துரிதமாக மேற்கொண்டு முடிக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே இப்பணியினை எவ்வித சுணக்கமின்றி மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை நல்கி, தங்களது மாவட்டத்தில் உள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களின் துணை கொண்டு மாணவர்களின் பெற்றோர்களைத் தொடர்பு கொண்டு இது குறித்த விவரங்களை எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொள்ள தெரிவிக்கவும், பெற்றோர்களின் கைப்பேசி எண்ணிற்கு OTP அனுப்பப்படும் விவரம் குறித்து பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்தி இப்பணியினை செய்து முடித்தல் வேண்டும்.

5. இப்பணியினை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பினை நல்கிடுமாறு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

16/5/24

அரசு செயலாளருக்காக,

16.5.2024